நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று (22.08.2024) திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் , மாநகராட்சி ஆணையர் வே.சரவணன், , நகரப்பொறியாளர் சிவபாதம், அரசு துறை அலுவலர்கள், மண்டலத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் மிதமான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, ஆக. 24-

தமிழ்நாட்டில் அடுத்த 7 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக நேற்று (23.08.2024) தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் விழிப்புணர்வு!

தேசிய குடற்புழு நீக்க நாள் விழிப்புணர்வு!

மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கி அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேச்சு!

சென்னை, ஆக. 24--

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (23.08.2024) சென்னை, சௌனாய்நகர், மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், தேசிய குடற்புழு நீக்க நாள் விழிப்புணர்வு பதாகைகள் வெளியிட்டு, மாணவர்களுடன் உறுதிமொழியினை ஏற்று, மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார். இந்நிகழ்வில் தஞ்சாவூரில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பாக நடைபெறவுள்ள கருத்தரங்கத்திற்கான கருத்துரு (DPH ICON-2024) வெளியிட்டார். அதன் பின்னர் நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் (Health Walk) 8 கி.மீ நடைபயணம் பற்றிய விழிப்புணர்வு பதாகைகள் வெளியிட்டார். மாநில அளவில் அனைத்து துறைகள் கலந்து கொண்ட தமிழ் நாடு சுற்றுலா பொருட்காட்சியில், மருத்துவத் துறை அரங்கு முதல் பரிசு பெற்றது. அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு சுற்றுலாத் துறை பொதுமேலாளர் அவர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் அவர்களிடம் ஒப்படைத்தார். அதன் ஒருங்கிணைப்பு பணியில் சிறந்து விளங்கியதற்கான விருதினை முனைவர் நாகராஜன், துணை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை பெற்றார்.

பின்னர் அமைச்சர் ஆற்றிய உரை வருமாறு :-

குடற்புழு நீக்க நாள்

இந்தியா முழுமைக்கும் யோகா பயிற்சிகள் கொண்டாடப்படுகிறது என்றால் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் யோகா பயிற்றுவித்தல் தொடங்கப்பட்டது சௌனாய்நகர் மாநகராட்சி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் தான். யோகா பயிற்றுவிக்கும் பதிவினை இப்பள்ளியில் இருந்துதான் தொடங்கினோம். இதுமட்டுமல்லாமல் சௌனாய்நகர் பகுதியில் உள்ள மகப்பேறு மருத்துவமனையில் தான் மகப்பேறு தாய்மார்களுக்கு யோகா பயிற்சி கற்றுத்தருகின்ற நிகழ்வும் நடத்தப்பட்டது. மாநகராட்சி பள்ளி மாணவர்களுக்கு யோகா பயிற்சி, மகப்பேறு தாய்மார்களுக்கு யோகா பயிற்சி போன்ற திட்டங்கள் சௌனாய் நகர் பகுதியில் இருந்து தொடங்கப்பட்ட திட்டங்கள் தான். மேலும் அல்பன்டோசல் என்று சொல்லக்கூடிய குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்குவது 2010 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 21 ஆம் தேதி சென்னையில் தொடங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தற்போது இந்த திட்டம் மாணவர்கள் மட்டுமல்லாமல் 20லிருந்து 30 வயதுக் குட்பட்ட பெண்களுக்கும் தரக்கூடிய அளவில் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சென்னையில் தொடங்கப்பட்ட இத்திட்டம் 2011ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு இத்திட்டத்தை தமிழ் நாடு முழுவதும் கொண்டு வந்தார்கள். அடுத்ததாக 2015ஆம் ஆண்டு இந்தியா முழுவதிலும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டு 6 மாதத்திற்கு ஒருமுறை இந்த மாத்திரைகள் எடுத்துக் கொள்கின்ற வகையில் இத்திட்டம் இந்தியா முழுமைக்கும் பரவியிருக்கின்றது. அதேபோல் சென்னையில் இருந்து தொடங்கப்பட்ட இன்னொரு திட்டம் சானிட்டரி நாப்கின். சென்னை பெரம்பூரில் உள்ள மகளிர் மேல்நிலைப் பள்ளியில் அன்றைய சமூகநலத்துறை அமைச்சர் திருமதி.கீதா ஜீவன் அவர்கள் மூலமாக தொடங்கி வைத்தோம். அந்த திட்டம் 2011க்குப் பிறகு மாநில அளவில் தொடங்கப்பட்டு இன்று தேசிய அளவில் உருவெடுத்துள்ளது. எனவே குடற்புழு நீக்க மாத்திரைகள் தமிழ்நாடு முழுவதிலும் 1 முதல் 19 வயதிற்குட்ட மாணவிகளுக்கு அல்பண்டசோல் மாத்திரைகள் வழங்கும் நிகழ்வு தொடங்கப்பட்டிருக்கிறது. அதேபோல் 20 வயது முதல் 30 வயது வரை உள்ள பெண்களுக்கும் இத்திட்டம் இப்போது தொடங்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவிலான திட்டம் என்பதால் WHO மற்றும் ICMR ஒவ்வொரு திட்டத்திற்கும் ஒரு மையக் கரு வைத்திருப்பார்கள். எனவே இந்த வருடத்திற்கான மையக்கருத்து, "குடற்புழு தொற்றை நீக்குவோம், ஆரோக்கியமான எதிர்காலத்தை உருவாக்குவோம்" என்பது.

உலக மக்கள் தொகையில் 24% மக்கள் மண் மூலம் பரவக்கூடிய குடற்புழு தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இங்கு அமர்ந்திருக்கும் மாணவிகளுக்கு நமக்கு குடற்புழு இருக்கிறதா, நாம் ஏன் இந்த மாத்திரையை உட்கொள்ள வேண்டும் என்கின்ற ஐயம் ஏற்படலாம். உலக சுகாதார நிறுவனமே இன்று 24% மக்கள் மண் மூலம் பரவக்கூடிய குடற்புழு தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கின்ற அறிவிப்பு வெளியிட்டிருக்கிறது. எனவே முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வருமுன் காப்போம் என்கின்ற அளவில் தற்போது குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது. குடற்புழு என்பது ஒரு ஒட்டுண்ணி என்றும், இது மனிதனின் குடற்பகுதியில் உள்ள இரத்தத்தினை உறிஞ்சி வாழும் என்றும், இதனால் ஊட்டச்சத்து குறைபாடு, வளர்ச்சி மாற்ற குறைபாடு போன்ற பிரச்சினைகள் ஏற்படுகிறது. ஆகையால் இந்த பாதிப்புகளிலிருந்து விடுபட தற்போது இந்த மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்நோயினால் கடுமையான தொற்று ஏற்பட்டால் வயிற்று போக்கு, வயிறு வலி, பலவீனமாக இருத்தல், பசியின்மை போன்ற அறிகுறிகள் தென்படும். நீண்டகாலமாக குடற்புழு நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இரத்த சோகை, உடல் வளர்ச்சி பாதிப்பு, செயல்திறன் குறைபாடு போன்றவை ஏற்படும். எனவே 2.15 கோடி பேர் பயனடையும் வகையில் இந்த திட்டத்தை சென்னை, சௌனாய் நகரில் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 20 முதல் 30 வயதிற்குட்பட்ட 54.67 இலட்சம் இளம் பெண்கள் பயன்பெறவுள்ளனர். ஆக மொத்தம் 2.69 கோடி பேர் இந்த திட்டத்தின் மூலம் பயன்பெறவுள்ளனர். இந்த மாத்திரை சாப்பிட்டால் குடலில் உள்ள குடற்புழுக்கள் நீக்கி, உடல் வளர்ச்சி, உடல் எடை போன்றவை அதிகரிக்கும், இரத்தசோகை தடுக்கப்படும், நோய் எதிர்ப்பு ஆற்றல் மேம்படும், அறிவாற்றல் அதிகரித்து சிறந்த கற்கும் திறன் உருவாகும். இந்த முகாமில், 54,400 அங்கன்வாடி பணியாளர்கள், 61,500 பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள், 12,000 சுகாதார பணியாளர்கள் மற்றும் 2,650 ஆஷா பணியாளர்கள் என்று தமிழ் நாடு முழுவதும், 1,30,550 நபர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். குடற்புழுக்கள் உருவாவதை தவிர்க்க திறந்த வெளி மலம் கழிப்பதை தவிர்த்து கழிப்பறையை பயன்படுத்த வேண்டும், பெருநகர சென்னை மாநகராட்சி போன்ற பெரு நகரங்களில் திறந்த வெளியில் மலம் கழிப்பது 100% இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் இன்னமும் போதுமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, வீட்டிற்கு ஒரு கழிப்பறை என்கின்ற வகையில் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திறந்த வெளியில் மலம் கழிப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள். அதேபோல் ஈக்கள் மொய்க்காமல் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் காய்கறிகள் மற்றும் பழங்களை கழுவிய பிறகுதான் உட்கொள்ள வேண்டும். பாதுகாப்பான சுத்தமான குடிநீரை பயன்படுத்த வேண்டும். குழந்தைகளுக்கு கை, கால்களை நன்றாக கழுவும் பழக்கத்தை கற்றுக் கொள்ள வேண்டும். உணவுக்கு முன்பும், கழிவறையைப் பயன்படுத்திய பிறகும் கையினை சுத்தமாக கழுவும் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நடப்போம் நலம் பெறுவோம்!

2023 நவம்பர் திங்கள் 4 ஆம் தேதி நடப்போம் நலம் பெறுவோம் திட்டம் தமிழ் நாட்டில் 38 மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டது. நானும் துறையின் அலுவலர்களும் ஜப்பான் தலைநகர் டோக்கியோவிற்கு சென்றிருந்போது 8 கி.மீ அளவில் நடைபாதை அமைக்கப்பட்டிருந்தது. தினந்தோறும் ஒருவர் நடக்க வேண்டும் என்பது நியதியாக ஜப்பானில் கொண்டிருக்கிறார்கள். ஒருவர் 8 கி.மீ தூரம் 10,000 அடிகளை எடுத்து வைக்கிறார் என்பது பொருள். எனவே இத்திட்டம் தமிழ்நாட்டில் தொடங்கிட மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் நடப்பது குறித்தான சுவர் விளம்பரங்கள் வைக்கப்பட்டு நடப்பதால் ஏற்படும் பயன்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 30 நிமிடங்கள் நடந்தால் 20 பலன்கள் கிடைக்கும் என்று எழுதப்பட்டிருக்கிறது.

மருத்துவத்துறை முதல்பரிசு

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் சென்னை தீவுத்திடலில் சுற்றுலாத் துறை சார்பில் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இதில் மருத்துவத்துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள மகத்தான திட்டங்கள் குறித்து பொருட்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான சுற்றுலாத் துறை சார்பாக விருது ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது. அதற்காக பாடுபட்ட பொது சுகாதாரத்துறை அலுவலர்களுக்கு பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விழா பேருரையாற்றினார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் ஆணையர் மரு.ஜெயச்சந்திரபானு ரெட்டி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளும் கட்சி தலைவர் ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர் மரு. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் கூ.பி.ஜெயின், மாமன்ற உறுப்பினர்கள், பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய

சட்டமன்றப் பேரவைச் செயலக அலுவலகத்திற்கு சுழற்கோப்பை!

அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேரவைச் செயலாளரிடம் வழங்கினார்!

சென்னை, ஆக.24-

தமிழ்நாடு அரசின் ஆட்சிமொழிச் சட்டத்திற்கிணங்க அரசின் நிருவாக மொழியாகத் தமிழ்மொழி இருந்து வருகிறது. ஆட்சிமொழிச் சட்டத்தின் அடிப்படையில் பிறப்பிக்கப் பெற்றுள்ள அரசாணைகளின்படி, அரசின் அனைத்துத் துறைகள், வாரியங்கள், கழகங்கள், தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் நிருவாக அலுவல்களில் முழுமையாகத் தமிழ்மொழியைப் பயன்படுத்திடும் நோக்கில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, எங்கும் தமிழ், எதிலும் தமிழ் எனும் இலட்சிய இலக்கை அடைய தமிழ் வளர்ச்சித் துறையால் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கம் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பெற்று வருகின்றன.

தமிழ் வளர்ச்சித் துறையின் தலையாயப் பணியான ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கப் பணியினை மேன்மையுறச் செய்திட, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் அவர்களால் தலைமைச் செயலகத் துறைகளிலும், தமிழ் வளர்ச்சி இயக்குநரால் துறைத் தலைமை அலுவலகங்கள், வாரியங்கள், கழகங்கள், அரசு நிறுவனங் கள், மாவட்டாட்சியர் அலுவலகங்கள் ஆகியவற்றிலும் இத்திட்டம் தொடர்பான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மண்டிலத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் / மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர்கள் / மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர்கள் ஆகியோர் மாவட்ட நிலை மற்றும் சார்நிலை அலுவலகங்களில் இவ்வாய்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வகையில் 2022-ஆம் ஆண்டிற்கான ஆட்சிமொழித் திட்டச் செயலாக்க ஆய்வு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் அவர்களின் தலைமையில் தலைமைச் செயலக அலுவலகங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவற்றுள், தமிழ் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய அலுவலகமாக தலைமைச் செயலகச் சட்டமன்றப் பேரவைச் செயலகம் தெரிவு செய்யப்பட்டு அதற்கானசுழற்கோப்பையை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று (23.08.2024 வெள்ளிக்கிழமை) சென்னை, தலைமைச் செயலகத்தில் சட்டமன்றப் பேரவைச் செயலக அரசு முதன்மைச் செயலாளர் கி. சீனிவாசனிடம் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசு செயலாளர் வே. இராஜாராமன், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ஔவை அருள் ஆகியோர் உடனிருந்தனர்.

தேனி வடக்கு மாவட்ட பொது உறுப்பினர் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் எம்.பி. அறிக்கை!

தேனி, ஆக. 24 -

தேனி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தங்கதமிழ்ச்செல்வன் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:

கடந்த 16.8.2024 அன்று நடைபெற்ற மாவட்டச் செயலாளர்கள் கூட்டத் தில் கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி தேனி வடக்கு மாவட்ட கழக பொது உறுப்பினர் கூட்டம் ஒன்றிய, நகர, பேரூர் அளவில் கீழ்க்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இடங்களில் நடைபெற இருக்கின்றது.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக பொது

உறுப்பினர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிகழ்ச்சி நிரல் விபரம்

25.08.2024-மாலை 4.00 மணி-போடிநாயக்கனூர் நகரம் வர்த்தகர் சங்கம் பொன் விழா மண்டபம்,மாலை 6.00 மணி- பெரியகுளம் நகரம்- கோவிந்தன் மயில்தாயம்மாள் மஹால், 26.08.2024 -காலை 10.00 மணி- தேனி வடக்கு ஒன்றியம்,-சமுதாய கூடம் - குப்பி0நாயக்க ன்பட்டி, காலை 11.00 மணி- பழனிசெட்டிபட்டிபேரூர்- சீனிவாச பெருமாள் கோவில் மண்டபம், மாலை 4.00 மணி- தேனி அல்லி நகரம் NRT மண்டபம்- தேனி,காலை 9.00 மணி - வடுகப்பட்டி பேரூர்- வேளாளர் மண்டபம்,காலை 10.00 மணி-பெரியகுளம் வடக்கு ஒன்றியம்-சந்தனகோவில்மண்டபம் சில்வார்பட்டி

27.08.2024-காலை 11.00 மணி - தேவதானப்பட்டி பேரூர்-ஜெயராஜ் மண்டபம்,காலை 12.00 மணி - கெங்குவார்பட்டி பேரூர்-SPT மண்டபம்,மாலை 3.00 மணி - பெரியகுளம் தெற்கு ஒன்றியம்-NRT மண்டபம்-லட்சுமிபுரம், மாலை 4.00 மணி -தென்கரை பேரூர் - தனுஸ்கோடி மண்டபம், மாலை 5.00 மணி- தாமரைக்குளம் பேரூர்- வ.உ.சி மண்டபம்,

காலை 10.00 மணி- போடி மேற்கு ஒன்றியம்- ஸ்ரீநிவாச பெருமாள் கோவில்-மண்டபம்சிலமலை

காலை 11.00 - மேலச் சொக்கநாதபுரம் பேரூர்-கருப்பசாமிகோவில்மண்டபம், மாலை 3.00 மணி-

போடி கிழக்கு ஒன்றியம்-SK மஹால்-உப்புகோட்டை.

28.08.2024-மாலை 4.00 மணி-பூதிப்புரம் பேரூர் - சுருளி பெருமாள் ஊஞ்சாலம்மாள் திருமண மண்டபம், மாலை 5.00 மணி -மீனாட்சிபுரம் பேரூர்-கண்டீஸ்வரி அம்மன்- கோவில் சமுதாய கூடம், 29.08.2024-காலை 10.00-தேனி தெற்கு ஒன்றியம்- தனலட்சுமி மஹால்-வீரபாண்டி, காலை 11.00 மணி- வீரபாண்டி பேரூர்- PSA லட்சுமி மஹால், மாலை 3.00 மணி-சின்னமனூர் மேற்கு ஒன்றியம்- கோகுல் மண்டபம்-சங்கராபுரம்,மாலை 4.00 மணி-குச்சனூர் பேரூர்-நாயுடு மண்டபம்-குச்சனூர், மாலை 5.00 மணி-மார்கையன்கோட்டை பேரூர் -

கோவில் பேரூராட்சிகல்யாண மண்டபம்

பொருள்: 1.கழக முப்பெரும் விழா கொண்டாடுதல். 2. கழகக் கொடி ஏற்றுதல், (50 இடங்களில் 3. சார்பு அணி நிர்வாகிகள் நியமனம், 4. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு தங்கதமிழ்செல்வன் எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நேற்று (23.08.2024) தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆட்சிமொழித் திட்டச் செயலாக்கத்தில் சிறந்து விளங்கிய சட்டமன்றப் பேரவைச் செயலக அலுவலகத்திற்கான சுழற்கோப்பையை சட்டமன்றப் பேரவைச் செயலக அரசு முதன்மைச் செயலாளர் கி. சீனிவாசன் அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உள்ளனர்.

திருவள்ளூர் மாவட்டம் பூண்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சதுரங்க பேட்டை பகுதியில் நேற்று (23.08.2024) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் தொல்குடியினர் வேளாண்மை, மேலாண்மை திட்டத்தின் கீழ் 290 பயனாளிகளுக்கு ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.உடன் அரசு செயலாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திருமதி.ஜி.லட்சுமி பிரியா திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் அரசு கூடுதல் செயலாளர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை திருமதி ஆர்.உமா மகேஸ்வரி இயக்குநர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை எஸ்.அண்ணாதுரை ம.தொ.ப. மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இராஜ்குமார் ஆகியோர் உள்ளனர்.